# கண்ணீர் வியர்வை இரத்தம்

தலைவர்

கலைஞர்

தூய தமிழ்க் காவலர்
கு.மு. அண்ணல்தங்கோ
நினைவு நூலகம்

# கண்ணீர் வியர்வை இரத்தம்

தலைவர்
கலைஞர்

தலைமைக் கழக வெளியீடு
திராவிட முன்னேற்றக் கழகம்
''அண்ணா அறிவாலயம்'' சென்னை-600 018.

1992 ஜுன்

விலை : ரூ. 2/-

அச்சிட்டோர் :

நியு ரெட்சன் பிரிண்டர்ஸ்
19/1, முசபர் ஜங் பகதூர் தெரு,
சென்னை-600 005. தொலைபேசி : 84 62 66

# இந்நூல் .....

"சரித்திரம் படித்தது போதும்
சரித்திரம் செய்வோம் வாருங்கள்"

லண்டன் மாநகரின் மீதே குண்டுகள் வீழ்ந்து பிரித்தானியப் பேரரசே சோதனையின் விளிம்பில் நின்றபோது தன் நாட்டு மக்களை எழுந்து நிற்கச் செய்ய பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் சொன்ன வாசகங்கள்தான் இவை.

'தடா' என்ற கொடும் சட்டத்தின் கீழ் கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டு; கழகத்தின் தலைவரே கைது செய்யப்படுவார்; தி.மு.கழகமே தடை செய்யப்படும் என்ற அச்சமும் பரபரப்பும் தமிழகத்தைச் சூழ்ந்திருந்த நேரத்தில்தான் தி.மு.கழகம் தனது ஒன்பதாவது உள்கட்சித் தேர்தலை கிளைக் கழகம் தொடங்கி தலைமைக் கழகம் வரை நடத்தி முடித்து சரித்திரம் செய்திருக்கிறது.

ஜனநாயக தலைவர்களாய்த் தொடங்கிய பலர் சில ஆண்டுகளிலே சர்வாதிகாரிகளாய் மாறியதுதான் உலக வரலாறு. கால் நூற்றாண்டாய் இந்தக் கழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கும் தலைவர் டாக்டர் கலைஞரவர்கள் இன்னமும் கடைக்கோடித் தொண்டனின் அங்கீகாரத்தைப் பெறும் உள்கட்சித் தேர்தல்களை ஊக்குவிப்பவரும், காப்பவரும், மதிப்பளிப்பவரும்

உலகெங்கும் உள்ள மக்கள் நாயக இயக்கங்களின் தலைவர்களில் இவர் ஒருவரேதான் என்பது மறக்க முடியாதது. உள்கட்சி ஜனநாயகத்தில் பண்டித நேருவே கூட நிற்க முடியாத இடத்தில் கலைஞரவர்கள் உயர்ந்து நிற்கிறார். ஜனநாயக வரலாற்றுக்குத் தலைவர் கலைஞர் என்றும் மறக்க முடியாத அருட்கொடை!

அந்தப் பெருமைக்குரிய தேர்தல்களை நடத்தி முடித்த பின்னர் கூடிய பொதுக்குழு மீண்டும் டாக்டர் கலைஞரவர்களைத் தொடர்ந்து ஏகமனதாக ஆறாவது முறை தலைவராக ஏற்று தன்னை பெருமைப்படுத்திக் கொண்டது.

அன்று தலைவரவர்கள் மனம் திறந்து ஆற்றிய உரை இது. நம்மிடம் உள்ள குறைகளைக்கூட மறைக்காமல் அவர் ஆற்றிய சொற்பொழிவில் அண்ணல் காந்தியாரிடம் இருந்தது போன்ற சததிய ஆவேசத்தைக் கண்டு அனைவரும் மெய்சிலிர்த்தார்கள்.

தந்தையையும், அண்ணனையும் இழந்த இந்த இயக்கக் குடும்பத்தைப் "பாங்கு" குறையாமல் நடத்தும் தலைவர் கலைஞரின் பேச்சைத் தலைமைக் கழகம் பெருமையுடன் உங்கள் முன் படைக்கின்றது.

**செல்வேந்திரன்**
தலைமைக் கழக வெளியீட்டுச்
செயலாளர்

---

தூய தமிழ்க் காவலர்
கு.மு. அண்ணல்தங்கோ
நினைவு நூலகம்

"ஆட்சிப் பொறுப்பு என்பது அதிகாரம் அந்தஸ்துகளுக்காக அல்ல; பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏற்ற கொள்கைகளை நிறைவேற்றவே" என்று ஜூன் 2 அன்று சென்னையில் கூடிய கழகப் பொதுக்குழுவில் உரையாற்றிய தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

காலையில் தொடங்கிய நம்முடைய புதிய பொதுக்குழுவினுடைய நிகழ்ச்சிநிரலில் நிறைவுக் கூட்டமாக உங்கள் முன்னால் சில கருத்துக்களை எடுத்துக் கூறுகின்ற வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன்.

**சோதனைகளையெல்லாம்
சாதனைகளாக ஆக்கிக்கொள்ளும்
சக்தி வாய்ந்த மாபெரும் இயக்கம் திமுக.**

இங்கே பாராட்டிப் பேசிய மாவட்டக் கழகச் செயலாளர்களும், அன்புக்குரிய நண்பர்கள் மன்னை, அன்பில் ஆகியோரும் எடுத்துக்காட்டியதைப் போலவும், ஏற்புரையாற்றிய நம்முடைய பொதுச்செயலாளர்,

பொருளாளர், துணைப் பொதுச்செயலாளர் ஆகியோர் சுட்டிக்காட்டியதைப் போலவும் தி.மு.கழகத்தினுடைய 9-வது [illegible]சி பொதுத்தேர்தல் நடைபெற்று சில பல காரணங்களால் குறித்த காலத்தில் தலைமைக் கழகத்தின் தேர்தல் நடைபெற இயலாதவாறு இடையிடையே அரசியல் அரங்கத்தில் தோன்றிய பிரச்சினைகளின் காரணமாக தடைபட்டு, எப்படியும் ஜூன் திங்களுக் குள்ளாகவே தலைமை கழகம் வரையிலான தேர்தலை நடத்தியே தீருவது என்று நானும் பொதுச்செயலாளரும் மற்றும் தலைமையிலே உள்ளவர்களும் முடிவு செய்து சற்று தேர்தல் பணியிலே வேகம் காட்ட வேண்டும் என்று அறிவித்து மாவட்டக் கழகச் செயலாளர்களும், மாவட்டங் களில் அமைக்கப்பட்ட; மாவட்ட கண்காணிப்புக் குழுவினரும் ஒன்றியக் கழகச் செயலாளர்களும் பல்வேறு அமைப்புகளின் செயலாளர்களும் வழங்கிய ஒத்துழைப் பின் காரணமாக எதிர்பார்த்தவாறு தேர்தல்கள் எல்லாம் முடிவுற்று இன்றைக்குத் தமிழ்நாட்டிலே உள்ள பல அரசியல்வாதிகள், இந்திய அரசியல் அரங்கத்திலே உள்ள அரசியல்வாதிகள் எல்லாம் போட்ட கணக்கிற்கு மாறாக மிக அமைதியான முறையில் தி.மு.கழகத் தலைமை நிர்வாகிகள் தேர்தல், தணிக்கைக் குழுத் தேர்தல் இவைகளெல்லாம் முடிவுற்று இந்த மாலை நேரத்தில் மகிழ்ச்சிகரமாக பொதுக்குழு நிறைவடைகிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது தி.மு.கழகம் எத்தனை சோதனைகள், வேதனைகள் வந்தாலும் கூட அவற்றை யெல்லாம் சாதனைகளாக ஆக்கிக் கொள்கின்ற சக்தி வாய்ந்த ஒரு மாபெரும் இயக்கம் என்பதை நாம் நிரூபித்துக் காட்டியிருக்கிறோம் என்று பெருமிதம் கொள்ளுகின்ற அளவிற்கு இந்த நிகழ்வுகள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

## தேர்தல் நேரத்தில் நடந்துவிட்ட சில விரும்பத்தகாத நிகழ்ச்சிகள்!

கழகத்தினுடைய தேர்தல்கள் படிப்படியாக நடைபெற்றபோது ஆங்காங்கு நடைபெற்ற சில விரும்பத்தகாத சம்பவங்கள் என்னுடைய மனத்தை, பொதுச்செயலாளருடைய மனத்தை, பொருளாளர், துணைப் பொதுச்செயலாளர் மற்றும் கழகத்திலுள்ள முன்னணியினர் அனைவரின் மனதை எந்த அளவுக்கு துன்புறுத்தி இருக்கிறது என்பதை நாம் ஒருவருக்கொருவர் சொல்லித்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில்லை. ஆனாலும் கூட இந்த நிகழ்வுகள் மாற்றாரால் பெரிதுபடுத்தப்பட்டன. நம்மீது தொடர்ந்து எரிச்சலைக் கக்கிக் கொண்டிருக்கிற பத்திரிகைக் காரர்களால் பெரிது படுத்தப்பட்டன. அவைகள் பெரிது படுத்தப்பட்டன என்று சொல்கிற காரணத்தால் நான் அவைகளை பெரிதாகக் கருதவில்லை என்று தயவுசெய்து யாரும் கருதக்கூடாது.

தஞ்சைத் தரணியில் பட்டுக்கோட்டையில் ஒரு பகுத்தறிவாளர் குடும்பமே பாழாகிவிட்டது. ஆனால் அதற்கு இந்தத் தேர்தல்தான் காரணமா என்றால் இல்லை. அதற்கு வேறு ஒரு காரணம் உண்டு. பல ஆண்டு காலமாகவே நம்முடைய இயக்கத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்திற்கும், இயக்கத்திற்கு புதிதாக வந்த மற்றொரு குடும்பத்திற்கும் இருந்த மனத்தாங்கல், கசப்பு, அது காழ்ப்பாக உருவாகி இறுதியாக இப்படிப்பட்ட ஒரு நிலைமைக்கு நாமெல்லாம் ஆளாகக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது.

தி.மு.கழகத்தினுடைய ஒரு பெரும் தளபதியாக பட்டுக்கோட்டை வட்டாரத்தில் விளங்கியவரும், அந்தப் பட்டுக்கோட்டையில் நகராட்சிமன்றத் தலைவராக பணியாற்றியவரும், தி.மு.கழகம் என்றால் அதற்காக தன் உயிரையும் தருவதற்குத் தயாராக இருக்கக்கூடிய தியாகச் சீலராக விளங்கியவருமான என் அருமை நண்பர் சீனிவாசன் குடும்பத்தில் ஏற்பட்டிருக்கிற இழப்பு சாதாரணமானதல்ல. ஆனால் அந்தக் குடும்பத்திற்கு இத்தகைய இழப்பை ஏற்படுத்தியவர்கள் யார் என்று எண்ணுகிறபோது, என்ன காரணம் என்று ஆராய்கிற நேரத்தில் வெறும் கழகத் தேர்தல் மாத்திரம் அல்ல; நீண்ட காலமாக காங்கிரஸ்காரருக்கும் அ.தி.மு.க.காரருக்கும் அந்தக் குடும்பத்தின்மீது இருந்து வந்த பகையையும் தேர்தல் நேரத்தில் தீர்த்துக்கொண்டார்கள்.

அதைப் போலத்தான் சென்னை அருகாமையில் திருவான்மியூரில் நடைபெற்ற மணி என்ற கழகத் தோழரின் கொலை தேர்தல் காரணமாக நடைபெற்றதல்ல; தேர்தல் நேரத்தில் நடைபெற்றது. நீண்ட நாளாக இருந்த பகையின் காரணமாக நடைபெற்ற அந்தக் கொலையும், இவ்வாறு திரிக்கப்பட்டு தி.மு.கழகத்தின் மீது பழிபோடப்பட்டது.

எப்படியிருந்தாலும்கூட இங்கே பேராசிரியர் எடுத்துக் காட்டியதைப் போல் அண்ணன் தம்பிகளாக குடும்பப் பாச உணர்வோடு வாழ்கின்ற இந்த இயக்கத்தில் தி.மு.கழக அமைப்புகளில் நடைபெறுகின்ற தேர்தல் போட்டியில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கின்ற தன்மை ஏற்படாமல் சில இடங்களில் பிடிவாத சூழ்நிலை இருந்த காரணத்தால் வன்முறைச் சம்பவங்கள்

ஏற்பட்டுவிட்டன. அதை நான் எண்ணிப் பார்க்கிறேன். இனி அத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்கு என்னென்ன வழிவகைகள் உண்டோ அவைகளை யெல்லாம் தி.மு.கழகத்தின் தலைமை நிர்வாகக் குழுவோடு, மாவட்டக் கழக செயலாளர்களோடு கலந்து பேசி நிறைவேற்றும் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## சட்டத்திட்டத் திருத்தக்குழு விரைவில் பணி தொடங்கும்

தம்பி வீரபாண்டி ஆறுமுகம் இங்கே பேசும்போது, இந்த தேர்தலில் எற்பட்ட சில பிரச்சினைகளுக்கு நம்முடைய சட்டதிட்டத்திலே உள்ள விதி முறைகளே கூட காரணமாக இருக்கலாம். அவைகளையெல்லாம் தலைமை ஆராய்ந்து தக்க முடிவுகளை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். அதற்காகத்தான் நம்முடைய தீர்மானங் களிலே முக்கியமான தீர்மானமாக விரைவில் சட்டதிட்ட திருத்தக்குழு அமைக்கப்பட்டு, நடந்து முடிந்த இந்தத் தேர்தலில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களையெல்லாம் களைவதற்கு என்னென்ன வழி முறைகளை சட்டதிட்டத்தில் சேர்க்கலாம் அல்லது திருத்தலாம் என்று எண்ணிப் பார்க்கின்ற அந்தப் பணி நிச்சயமாக விரைவிலே நடைபெறும் என்பதையும் அதற்காக சட்டதிட்ட திருத்தக் குழு இன்னும் சில நாட்களில் நம்முடைய பொதுச் செயலாளரால் அறிவிக்கப்படும் என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

பேராசிரியர் இங்கே அழகான, ஆழமான, அறிவுப்பூர்வமான அதே நேரத்தில் நம்முடைய இனத்தின்

நிலையை எண்ணி நமக்கு நாமே அங்கலாய்த்துக் கொள்ளத்தக்கதான, அந்த அங்கலாய்ப்பின் காரணமாக ஒரு எழுச்சி பெறத்தக்க வகையில் உரையினை இங்கே ஆற்றியிருக்கிறார்கள். நான் இங்கே ஆற்ற எண்ணுகிற உரை, பேராசிரியருடைய உரைக்குப் பிறகு அவர் எந்தக் குறிக்கோள், எந்த லட்சியம், எந்தக் கொள்கை நிறைவேற வேண்டும் என்று தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா இவர்களெல்லாம் விரும்பினார்களோ அந்தக் கொள்கை குறிக்கோள் வெற்றி பெற இங்கே இந்தப் பொதுக்குழுவிலே அவைகளை அவர் விரிவாகப் பேசிய பிறகு, அந்தக் கொள்கைகளைப் பற்றிய விளக்கங்களையோ, விரிவுரை களையோ தருவதற்கு நான் விரும்பாமல், அவை நிறைவேற்றுவதற்கான செயல்பாடுகள் என்ன என்பதை இந்தப் பொதுக்குழுவில் கூடியிருக்கின்ற உறுப்பினர்கள், கழகக் கண்மணிகள், உடன் பிறப்புக்கள் எண்ணிப் பார்த்திடவும் அந்த எண்ணங்களை செயல்படுத்திடவும் சிலவற்றை மட்டும் இங்கே நான் சொல்ல விரும்புகின்றேன்.

பேராசிரியர் இங்கே தமிழினம், தமிழ் உணர்வு, தமிழ் மொழி இவைகளைப் பற்றியெல்லாம் பேசினார். ஆனால் இன்றைக்கிருக்கின்ற நிலை என்ன என்பதை ஒரு சிறு எடுத்துக்காட்டு மூலமாக சொல்ல விரும்புகிறேன்.

## முரசொலியில் ஏற்படும் இழப்பை ஈடுகட்ட

பேராசிரியர் இங்கே பேசும்போது முரசொலி பத்திரிகையை பட்டி தொட்டிகளிலெல்லாம் வாங்கிப் படிக்க வேண்டும் என்று சொன்னார். அந்த முரசொலி பத்திரிகை தி.மு.கழகம் லட்சக்கணக்கான உறுப்பினர் களைக் கொண்ட ஒரு பேரியக்கமாக இருந்தாலும் கூட

ஆயிரக்கணக்கான பிரதிகள்தான் விற்பனையாகின்றன. இதன் காரணமாக மாதந்தோறும் ஏற்படுகின்ற இழப்பை எப்படி ஈடு செய்வது என்று திகைத்து அதை ஈடு செய்வதற்கு வேறு வழி உண்டா என்று பார்த்தபோது, இன்னொரு ஏடு தொடங்கி, அதை ஒரு பொதுவான ஏடாக எல்லாச் செய்திகளும் வருகின்ற ஏடாகத் தொடங்கி அது வியாபார ரீதியாக வெற்றி பெற்றால் அதிலே வருகிற ஆதாயத்தைக் கொண்டு முரசொலிக்கு வருகின்ற இழப்பை ஈடு செய்து, இதையும் காப்பாற்றலாம் என்கின்ற எண்ணத்தோடு ஒரு ஏடு தொடங்கப்பட்டது.

## "தமிழன்" என்று பெயர் வைப்பதே தவறா?

அந்த ஏட்டுக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று என்னைக் கேட்டபோது 'தமிழன்' என்று பெயர் வைக்கலாம் என்று நான் சொன்னேன். ஆனால் தம்பி முரசொலி மாறன் அந்த 'தமிழன்' என்கின்ற பெயரை விற்பனையாளர்களெல்லாம் விரும்புகிறார்களா, வாசகர்கள் விரும்புகிறார்களா, குறிப்பாக நம்முடைய தி.மு.கழக நண்பர்கள் விரும்புகிறார்களா என்று ஆராய்ந்து பார்க்க ஒவ்வொரு ஊருக்கும் ஆட்களை அனுப்பி ஒரு ஆய்வு நடத்தியபோது 'தமிழன்' என்று பெயர் வைத்தால் வியாபாரம் சரியாக இருக்காது. அதை ஏதோ ஒரு கட்சிப் பத்திரிகை என்று எண்ணிவிடுவார்கள். எனவே ஒரு பொதுவான பெயராக வையுங்கள் என்ற யோசனையை பெரும்பாலோர் சொன்னார்கள்.

## தமிழன் என்ற பெயர் நான்கு பேர் காதிலாவது ஒலித்துக் கொண்டிருக்கட்டும்!

நாளெல்லாம் தமிழ், தமிழினம், தமிழ்நாடு என்று அன்று முதல் இன்று வரையிலே உரக்கக் கூவி வருகின்ற

நமக்குத் தமிழன் என்ற பெயரில் ஒரு பத்திரிகையை தொடங்குவதற்குக் கூட வேண்டுமென்றே அல்ல, வெறுப்பாக அல்ல, கூடாது என்பதற்காக அல்ல - நல்ல எண்ணத்தோடு நம்மவர்களே அப்படி பெயர் வைத்தால் சரியாக இருக்காது. வியாபாரம் ஒழுங்காக நடைபெறாது அதை ஏதோ ஒரு கட்சிப் பத்திரிகை என்று வாங்காமல் விட்டு விடுவார்கள் என்று சொல்கின்ற ஒரு நிலைமை இருக்கிறது. எனவே தான் இந்த நிலைமையை மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான். விற்கிற வரையில் விற்கட்டும். 'தமிழன்' என்ற சொல் நாலு பேர் காதிலாவது விழுந்து கொண்டே இருக்கட்டும் அந்தப் பெயரையே வைப்போம் என்று கடைசியாக அந்தப் பெயரே வைக்கப்பட்டது. (கை தட்டல்)

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் தமிழன், தமிழினம் என்று சொல்வதே கூட ஏதோ ஒரு கட்சிக்குரிய ஒன்றாக - சொல்வதே தவறு, பிழையானது. அப்படிச் சொன்னால் அதனால் எந்த ஆதாயமும் இல்லை என்று கருதுகின்ற ஒரு சொல்லாக ஆகிவிட்டிருக்கின்ற ஒரு காலகட்டத்திலேதான் தமிழை, தமிழ் இனத்தை, தமிழ்நாட்டை வாழ வைக்கின்ற கடமை தமிழ் நாட்டிலே தி.மு.கழகத்திற்கு உண்டு என்கின்ற இந்த உணர்வைப் பெற்று அந்த உணர்வை நாம் வளர்த்திட வேண்டும்.

## வெற்றி தோல்விக்கிடையே நாம் கொள்கையில் மாறாதிருப்போம்

இங்கே தம்பி கோ.சி. மணி பேசும்பொழுது ஆட்சியைப் பற்றிக் குறிப்பிட்டார். ஆட்சியின் மீதுள்ள காதலால் அவர் அதைக் குறிப்பிடவில்லை. ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கொள்கைகளுக்காக,

லட்சியங்களுக்காக இந்த இயக்கம் இருக்க வேண்டுமென்கின்ற அந்த எண்ணத்தோடு குறிப்பிட்டார். அவர் மேலும் பேசும் பொழுது கலைஞர் அவர்களுடைய ஜாதகமே என்று கோடிட்டுக் காட்டி - ஒரு முறை வெற்றி பெறுவது. அடுத்த முறை தோல்வியடைவது என்று சொன்னார். ஆனால் சரித்திரக் கணக்கு சரியானதல்ல. தொடர்ந்து வெற்றியும் பெற்றிருக்கிறோம். தொடர்ந்து தோல்வியும் பெற்றிருக்கிறோம். எனவே என்னைப் பொறுத்தவரையில் வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்தது கூட அல்ல. தொடர்ந்து வெற்றியும் பெற்றிருக்கின்றோம். தொடர்ந்து தோல்வியும் பெற்றிருக்கின்றோம். ஆனால் இந்த இரண்டு நிலையிலும் தொடர்ந்து கொள்கைவாதிகளாக இருக்கிறோம். இதை மறந்துவிடக்கூடாது.

1967-ஆம் ஆண்டு அண்ணா தலைமையில் மாபெரும் வெற்றி பெற்று இந்த மாநிலத்தை ஆளுகின்ற பொறுப்பை அண்ணா ஏற்றார். அண்ணாவின் மறைவுக்குப் பிறகு 71-ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராஜரும், மூதறிஞர் ராஜாஜியும் ஒன்று சேர்ந்து தி.மு.கழகத்தை வீழ்த்த அன்றைக்குப் படை திரட்டி நின்றபோது தி.மு.கழகம் வெற்றி பெறாது என்று அகில இந்தியாவிலுள்ள அரசியல் ஆருடக்காரர்கள் அத்தனை பேரும் திட்டவட்டமாகத் தெளிவாகக் கூறிய அந்தக் கால கட்டத்திலும் கூட தி.மு.கழகம் 185 இடங்களில் வெற்றி பெற்றது. நான் சொல்ல, விரும்புகிறேன். அன்றும் சரி. இன்றும் சரி. இதுவரையிலே 185 இடங்களை ஆளுங்கட்சி ஒன்று பெற்றதென்றால் தமிழகத்தில் தி.மு.கழகத்தைத் தவிர வேறு எந்தக் கட்சியும் பெற்றதில்லை.

## கொள்கையை விட்டுவிட்டு எமர்ஜென்சியை ஏற்றிருந்தால்-

சற்று வளைந்து கொடுத்திருந்தால் நாம் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பிலே இருந்திருக்கலாம். கொள்கைகளை விட்டு விட்டு தொழுது வணங்கத் தெரிந்திருந்தால் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பிலே இருந்திருக்கலாம். 75-ஆம் ஆண்டு எமர்ஜென்சி பிரகடனப்படுத்தப் பட்டபோது, இந்திராகாந்தி அம்மையாருக்கு, ஒரு தந்தி கொடுத்துவிட்டு, நாங்கள் அவசர கால பிரகடனத்தை வரவேற்கிறோம். உங்கள் இருபதம்சத் திட்டம்தான் இந்தியாவை வாழவைக்கக் கூடியது. நீங்கள் ஜெயப்பிரகாஷ்நாராயணனையும், இந்தியாவின் சுதந்திரத் திற்காக பாடுபட்ட தலைவர்களையும் கைது செய்து காராக்கிரகத்தில் வைத்திருப்பது நியாயமானதுதான் என்று ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தால் - மாறாக தி.மு.கழக செயற்குழு கூடி எமர்ஜென்சியை எதிர்க்கிறோம் என்ற தீர்மானத்தை நிறைவேற்றாமல் இருந்திருந்தால் - தொடர்ந்து நாம் ஆட்சியில் இருந்திக்க முடியும். அல்லது அருமை நண்பர் எம்.ஜி.ஆரைப் போல மத்தியில் எந்த அரசு வந்தாலும் அதை ஆதரிப்பது என முடிவெடுத் திருந்தால் நாம் தொடர்ந்து ஆட்சியில் இருந்திருக்க முடியும்.

இப்போதுகூட என்ன? 89-ல் ஆட்சிக்கு வந்தோம். இடையிலே தேசிய முன்னணி ஆட்சி வி.பி.சிங் தலைமையில் நடைபெற்றது. இரண்டாண்டு காலம் ஆட்சியில் இருந்தோம். வி.பி.சிங் ஆட்சி கவிழ்க்கப் பட்டது. சந்திரசேகர் ஆட்சிக்கு வந்தார். இரண்டு முறை

மூன்று முறை அவரை நான் சந்தித்து தமிழ்நாட்டு நிலவரங்களைப் பற்றி பேசிய போதெல்லாம் அவர் என் வாயிலிருந்து என்ன வார்த்தையை எதிர்பார்த்தார் என்று கருதுகிறீர்கள்? நாங்கள் நிபந்தனையற்று உங்களை ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம் என்று ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் இன்றைக்கு நான்தான் முதலமைச்சர். தி.மு.கழகம் தான் தமிழகத்தை இன்னும் ஆளுகின்ற கட்சியாக இருக்கும்.

## கழக லட்சியங்களைக் காத்திட - கண்ணீர், வியர்வை, - ரத்தம்!

ஆனால் அதற்கு இடந்தராத காரணத்தால், கொள்கைகளை விட்டுத் தராத காரணத்தால், நாங்கள் தேசிய முன்னணியிலிருந்து விலகி, பினாமி அரசை ஆதரிக்கத் தயாராக இல்லை என்ற முடிவை எடுத்த காரணத்தாலேதான் கழக ஆட்சி கலைக்கப்பட்டது. உதட்டசைவு, கண் அசைவு அன்றைக்கு நம் பக்கமிருந்து சந்திரசேகருக்கு கிடைத்திருக்குமேயானால் கழக ஆட்சியை நாம் இழந்திருக்க தேவையில்லை.

அதற்காகத்தான் சொல்கிறேன். என்னுடைய தலைமையைப் பற்றி என்னுடைய அன்பிற்குரிய, மதிப்பிற்குரிய, மரியாதைக்குரிய என்னுடைய மூத்த சகோதரராக நான் கருதிக் கொண்டிருக்கிற பேராசிரியர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார். தனிப்பட்ட ஒருவருக்காக அல்ல. தமிழ்ச் சமுதாயத்திற்காக அவர் தலைமையை ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்று பேராசிரியர் சொன்னார். நம்முடைய துணைப் பொதுச் செயலாளர் வின்ஸ்டன் சர்ச்சிலைப் பற்றி இங்கே எடுத்துக் காட்டினார். இரண்டாவது உலக யுத்தம்

நடைபெற்றுக்கொண்டிருந்தபோது களத்தில் நின்று கொண்டு சர்ச்சில் சொன்ன வார்த்தைகள் இங்கிலாந்து நாட்டு மக்களைப் பார்த்துச் சொன்ன வார்த்தைகள் "எனக்குத் தேவை உங்களுடைய கண்ணீர்! வியர்வை! ரத்தம்! என்பவைதான்!.

அதைத்தான் இங்கே கூடியிருக்கின்ற உடன் பிறப்புக்களே உங்களைப் பார்த்து சொல்கின்றேன். எனக்குத் தேவை உங்களுடைய கண்ணீர், ரத்தம், வியர்வை! (பலத்த கைதட்டல்) எனக்காக அல்ல. அண்ணாவின் கொள்கைகளைக் காப்பாற்றுவதற்காக! தி.மு.கழகம் என்கின்ற இந்த பேரியக்கத்தைக் காப்பாற்றுவதற்காக! தி,மு.கழகத்தின் லட்சியங்களை காப்பாற்றுவதற்காகத்தான் நான் இதைக் கேட்கிறேன். தனிப்பட்ட எங்களுக்காக அல்ல. இந்த இயக்கத்திற்காக நாம் நம்மை அர்ப்பணித்துக் கொண்டாக வேண்டும்.

நம்முடைய கொள்கைகளை, நம் இலட்சியங்களை இன்னும் ஒரு பத்தாண்டு காலம் போனால், நாம் இல்லாவிட்டால் தி.மு.கழகம் அழிக்கப்பட்டு விட்டால், எதிர்கால சந்ததி புத்தகங்களில், வரலாறுகளில்தான் அதைத் தேடிப் பார்கக வேண்டும்.

## எதிர் காலத்தில் தமிழ்க் கலாச்சாரமே அழிந்து போய்விடும்!

பெரியார் என்று ஒருவர் இருந்தார். அண்ணா என்று ஒருவர் இருந்தார். அவர்கள் உருவாக்கிய சுயமரியாதை இயக்கம், அவர்கள் உருவாக்கிய பகுத்தறிவு இயக்கம் அவர்கள் உருவாக்கிய திராவிடர் இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம் என்கின்ற அரசியல் இயக்கம்

இவைகளெல்லாம் மண்ணோடு மண்ணாகிவிட்டன; ஒரு காலத்திலே இது ஆட்சிக் கட்டிலிலேகூட இருந்தது. தமிழ்நாட்டு மக்கள் உள்ளத்தில் அந்தக் கொள்கைகள் பதிந்திருந்தன. ஆனால் ஒரு ஆட்சி மாற்றத்தின் காரணமாக அந்தக் கலாச்சாரமே அழிந்துவிட்டது என்று எதிர்கால வரலாறு படைக்கப்பட்டு விடும்.

அதைத் தடுக்கத்தான் இன்றைக்கு நம்முடைய கழகம் பணிகளை ஆற்றிட வேண்டியிருக்கிறது என்பதை நான் உங்களுக்கு எடுத்துக்கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

## வெற்றி வாய்ப்பை இழந்தோரும் நம் உடன்பிறப்புகள்தான்!

அந்தப் பணிகளை நாம் எப்படி ஆற்றுவது? எவ்வாறு ஆற்றுவது? எந்த முறையில் ஆற்றுவது? நான் முதலில் உங்களையெல்லாம் மன்றாடிக் கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன். மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கழகத்தின் தேர்தல் முடிந்து மகிழ்ச்சிகரமாக இந்த பொதுக்குழுவில் கூடியிருக்கிற உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கின்றேன். இந்தப் பொதுக்குழுவுக்கு வரமுடியாமல் வெற்றி வாய்ப்பை இழந்து ஊரில் தங்கியிருக்கின்ற உடன்பிறப்புகளை யெல்லாம் எண்ணிப் பாருங்கள். அவர்களையெல்லாம் பகைவர்களாக கருதாதீர்கள். "அவர்களும் நம்மவர்கள் தான். நம்முடைய அண்ணன் தம்பிகள்தான். யார் பணியாற்றுவது, பொறுப்பேற்பது என்று நடைபெற்ற போட்டியில் அவர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டார்கள். நாம் முன்னுக்கு வந்திருக்கின்றோம். எனவே அவர்களும் நாமும் சேர்ந்து, இணைந்து கழகத்தை வலுப்படுத்து

வோம்" என்கின்ற அந்த அடிப்படை உணர்வை முதலில் இதயத்தில் பதிய வைத்துக் கொள்ளுங்கள்.

## புகையும் புகையும் மோதியதாக எண்ணிக்கொள்வீர்!

அதைப் போலத்தான் இங்கே வராத அந்த உடன்பிறப்புகளுக்கு நான் சொல்லிக்கொள்வேன். உங்கள் மூலமாக அந்தச் செய்திகள் எட்டும் என்பதற்காக சொல்லிக்கொள்கிறேன். நாம் யாரிடத்தில் தோற்றோம்? யாரிடத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தோம்? பகைவரிடத்திலே? அல்ல. பகையும் பகையும் மோதினால்தான் அங்கே தலை உருளும். ரத்தம் ஓடும். ஆனால் புகையும் புகையும் மோதினால் அது பெரும் புகையாகுமே தவிர, பகையால் ஏற்படுகின்ற அந்தப் பாதகம் நிச்சயம் ஏற்படாது. அதுவும் இந்தப் புகை அகிலின் புகை. சந்தனத்தின் புகை! ஊதுபத்தியின் புகை! இந்த புகை ஒன்றோடு ஒன்று மோதியதாகத்தான் நீங்கள் கருதிக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட தேர்தல் போட்டிதான் நடந்து முடிந்திருக்கிறது என்கின்ற உணர்வோடு நம்முடைய பணிகளை நாம் தொடர்ச்சியாக ஆற்ற வேண்டும் என்று நான் உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கின்றேன்.

பேராசிரியர் குறிப்பிட்டார் 'இளைஞர்கள் ஆங்காங்கு மன்றங்கள் அமைக்க வேண்டும். படிப்பகங்களை அமைத்து நம் ஏடுகளை படிக்க வேண்டும், என்றெல்லாம் குறிப்பிட்டார்.

நான் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகின்றேன். பொதுச்செயலாளர் சுட்டிக்காட்டியதைப் போல் *1942*-ம்

ஆண்டு தொடங்கப்பட்ட முரசொலி பத்திரிகையின் ஆண்டு விழாவுக்கு அவரை அழைத்து வாழ்த்துரை வழங்கச் செய்த அந்த நாளெல்லாம் எனக்கு பசுமையாக நினைவில் இருக்கிறது. அடுத்து என்னை அழைக்கவில்லை என்று பேராசிரியர் சொன்னார். அடுத்து ஆண்டு விழா நடைபெறவில்லை. நடைபெற்றிருந்தால் அவர் இல்லாமல் நடைபெற்றிருக்காது!

## பேராசிரியருடன் கொண்ட நட்பு
## கொள்கையால் வந்த உறவு

ஏனென்றால் அவருக்கும் எனக்கும் இருக்கின்ற தொடர்பு-நட்பு-உறவு இது தனிப்பட்ட முறையிலே ஒரு கருணாநிதிக்கும், ஒரு அன்பழகனுக்கும் ஏற்பட்டுவிட்ட தொடர்பு அல்ல. நாங்கள் இருவரும் நண்பர்களாக சந்தித்துக் கொண்டவர்கள் அல்ல. நாவலரையாவது அவர் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் கல்லூரி நண்பராக சந்தித்திருக்கக்கூடும். அந்த வாய்ப்புக்கூட எனக்குக் கிடையாது. என்னையும் அவரையும் ஒட்ட வைத்து இருவரையும் நண்பர்களாக ஆக்கியது கொள்கைதான். திராவிட இயக்கக் கொள்கைதான்.

அந்தக் கொள்கை வலுவாக அவர் உள்ளத்திலே இருந்த காரணத்தினால்தான் இங்கே நண்பர் மதுராந்தகம் ஆறுமுகம் குறிப்பிட்டதுபோல 1976-ம் ஆண்டு தலைமைப் பதவியிலிருந்தே கருணாநிதி விலக வேண்டும் என்ற ஒரு கோரிக்கை வைக்கப்பட்டு, கருணாநிதி தலைமைப் பதவியிலிருந்து விலகிவிட்டால் இந்திரா காந்தியின் கோபம் குறையும். தி.மு.கழகம் தப்பும் என்று சிலர் கணக்கிட்டு அதற்கான முயற்சியில் ஈடுபட்டபோது

அதற்காகச் சிலர் பேராசிரியரை அணுகியபோது அதை எதிர்த்து, "இந்த நேரத்தில் கழகத்தை கட்டிக்காக்க நாமெல்லாம் ஒற்றுமையாக இருக்க வேண்டுமேயல்லாமல், நீங்கள், கழகம் தப்பும் என்பதற்காக இதைச் சொல்லவில்லை. நீங்கள் தப்ப வேண்டும் என்பதற்காக இந்தக் கருத்தைச் சொல்கிறீர்கள். எனவே நான் இதை ஒப்ப முடியாது" என்று உரைத்தவர் நம்முடைய பேராசிரியர்.

அந்தக் காலத்தில் அண்ணா அறிவாலயம் நமக்கு இல்லை. அன்பகம் தான். அங்குதான் ஒவ்வொரு நாளும் நானும் நம்முடைய கழக முன்னணியினரும் அமர்ந்து பேசிவோம். அப்படி பேசுகின்ற அந்த அன்பகத்தில் அமர்ந்திருக்கின்ற வரிசையில் நாவலரானாலும் மற்றும் பல தலைவர்களானாலும் அத்தனை பேரும் அப்போது எதையோ பறி கொடுத்ததுபோல உட்கார்ந்திருப்பார்கள். அதைப் பற்றிக் கவலைப்படாமல் உரையாடுகின்ற ஒரே தலைவராக பேராசிரியர்தான் அன்றைக்கும் விளங்கினார். இன்றைக்கும் விளங்குகிறார். நம்முடைய பொருளாளருக்கு அப்போது எந்தப் பதவியும் இல்லை. கழகத் தோழர்கள் எல்லாம் நூற்றுக்கணக்கில் சிறையில் மிசா கைதிகளாக அடைபட்டிருந்த அந்தக் கொடுமையான நேரத்தில் ஒவ்வொரு நாளும் ஒரு நண்பரை என்னை விட்டுப் பிரித்தது அன்றைக்கிருந்த ஆட்சி. டி.ஆர்.பாலு என் காரை ஓட்டி வருவார். இரண்டு நாள் ஓட்டுவார். மூன்றாவது நாள் கைது செய்யப்படுவார். கண்ணப்பன் என்னுடைய கார் ஓட்ட வருவார். அவரும் கைது செய்யப்படுவார். என்னோடு துணைக்கு உசேன் வருவார். மறுநாள் கைது செய்யப்படுவார். ஆலந்தூர் பாரதி வருவார். சுருளி வேல் வருவார். அடுத்த நாள் கைது

செய்யப்படுவார்கள்! இது அன்றாடம் நடைபெற்றுக் கொண்டிருந்த நிகழ்ச்சிகள். எனக்கென்று இருந்த டிரைவர்கள். அரசு இருந்தவரை அதிகச் சம்பளத்தை வாங்கிக் கொண்டிருந்தவர்கள். அரசு போன மறுநாளே ஒரு டிரைவர் கை ஒடிந்துவிட்டது என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். இன்னொரு டிரைவர் நெஞ்சுவலி என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். அடுத்த நாள் அவர்கள் வேறு முதலாளிகளிடத்தில் கார் ஓட்டிக் கொண்டிருந்த காட்சியையும் கண்டேன். அந்த நேரத்தில் ஒரு கடை நிலை ஊழியர் செய்ய வேண்டிய வேலையை, யாராவது வந்தால் அவர்களுக்கு ஒரு நாற்காலியை எடுத்துப் போடுகின்ற வேலையைச் செய்தவர்தான் அமைச்சராக இருந்த அருமை நண்பர் சாதிக் என்பதை எண்ணுகிற நேரத்தில்தான் அவர் இன்றைக்கு பொருளாளராக ஏக மனதாக தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள் என்றால் ஏதோ தயவுதாட்சண்யத்திற்காக செய்யப்பட்ட காரியமல்ல. அவர் இந்த இயக்கத்திற்கு ஆற்றிய பணியினால்தான் தியாகத்திற்காகத்தான் அவர் இன்று பொருளாளராக வீற்றிருக்கிறார்.

தி.மு.கழக தலைமையையே மாற்ற வேண்டும் என்கின்ற ஒரு கருத்து அரசின் உளவுத்துறையினால் அன்றைக்கு (1977ல்) சொல்லப்பட்டபோது எனக்கு பக்கபலமாக - எனக்கென்றால் தனிப்பட்ட கருணாநிதிக்கு அல்ல. கழகத்திற்கு பக்கபலமாக, அண்ணா உருவாக்கிய கொள்கையை காப்பாற்ற எந்தச் சோதனையிலும் நாம் வளைந்துவிடக் கூடாது என்ற நெஞ்சுறுதியோடு அன்றைக்கு ஒன்றுபட்டிருந்தோம்.

அப்படி ஒன்றுபட்டிருந்த காரணத்தால்தான் இன்றைக்கு பல்லாயிரக் கணக்கான உடன் பிறப்புக்கள் நாங்கள் எதற்கும் தயாராக இருக்கிறோம்.

கவலைப்படாதீர்கள் என்று சொல்லுகின்ற அந்த நிலை தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது.

## என்னோடு வந்தால் தீயைத் தாண்ட வேண்டும்!

நம்மிடத்திலே ஆட்சி இல்லை. ஆட்சி இல்லை என்கிறபோது எந்த ஒரு கட்சிக்காவது இப்படி ஒரு கட்சித் தேர்தலில் இவ்வளவு பெரிய போட்டி இருக்கும் என்று நீங்கள் யாராவது கருதுகிறீர்களா?

எனக்கே கூட ஒரு பயம்! ஒரு மகிழ்ச்சி! ஏ அப்பா! ஆட்சியில்லாமலே இவ்வளவு போட்டி என்றால் ஆட்சி இருந்திருந்தால் எவ்வளவு போட்டி இருந்திருக்கும் என்று கூட எண்ணியது உண்டு.

ஆனால் எனக்குத் தெரியும். ஆட்சி இருந்தாலும், இல்லாவிட்டாலும், தி.மு.கழகத்தில் ஒரு மாவட்டச் செயலாளர் என்கின்ற பெருமையை விட மாண்புமிகு அமைச்சர் என்பதிலே பெருமை இல்லை என்பதை உணர்ந்தவர்கள்தான் எனக்கு தம்பிகளாக இருக்கின்றீர்கள். (பலத்த கைதட்டல்)

என்னோடு இருக்க வேண்டும் என்றால், என்பின்னால் வரவேண்டுமென்றால் உடன்பிறப்புகளே என்னோடு வந்தால் தென்றலைத் தீண்ட முடியாது. நீங்கள், தீயைத்தான் தாண்ட வேண்டும். அக்னிப் பரீட்சைக்கு தயாராக இருப்பவர்கள்தான் எங்களோடு வர முடியும். அப்படி வந்திருக்கிற உடன்பிறப்புக்களைத்தான் இந்த மண்டபத்திலே மாவீரர்களாக, தளபதிகளாக,

சிப்பாய்களாக, இந்த இயக்கத்தைக் காக்கின்ற காவல் தெய்வங்களாக நான் பார்க்கிறேன்.

யார், யாரோ, யார்யாரையோ, தெய்வமே என்று வணங்கிக் கொண்டிருக்கிற இந்தக் காலகட்டத்தில், இந்த இயக்கத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்ற காவல் தெய்வங்களாம் உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் கைகளை எடுத்து கண்களில் ஒத்திக்கொண்டு கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கழகத்தைக் காப்பாற்ற மிக மிக முக்கியமான தேவை. நம்மிடத்திலே இருக்கிற சிறு சிறு பிணக்குகளைக் கூட விட்டொழிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திராவிடர் கழகத்தார் அடிக்கடி சொல்கிறார்களே நாங்கள் தேர்தலிலே ஈடுபடுகிற இயக்கமல்ல. எங்களுக்கு தேர்தல் பைத்தியம் கிடையாது. பெரியார் எங்களை அப்படி வளர்க்கவில்லை என்றெல்லாம் சொல்கிறார் களே. ஆனால் அண்ணா ஏற்ற பெரியாருடைய கொள்கை களை அண்ணா முதல் அமைச்சராக ஆகாவிட்டால், கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வராவிட்டால் நிறைவேற்றியிருக்க முடியுமா என்பதை எண்ணிப் பாருங்கள்.

சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாக வேண்டும் என்பது பெரியாருடைய கொள்கைதான். பெரியாரால் ஆதரிக்கப்பட்ட காங்கிரஸ் தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது, அந்தக் கொள்கையை நிறைவேற்ற முடிந்ததா? எத்தனையோ முறை நானும் பேராசிரியரும் மற்றவர்களும் சட்டமன்றத்தில் மசோதா கொண்டு போனோம். அதை காமராஜர் ஏற்றுக்கொண்டாரா? இல்லை. ஆனால்

சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லு படியாகும். இந்த மசோதாவை நாங்கள் சட்டமாக்கி யிருப்பது பெரியாருக்கு நாங்கள் தந்திருக்கின்ற காணிக்கை மாத்திரம் அல்ல. அந்த அரசே அவருக்குத் தரப்பட்ட காணிக்கை தான் என்று சொல்லி பேரறிஞர் அண்ணா அந்த சட்டத்தை நிறைவேற்றினார் என்றால் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற காரணத்தால்தான் நம்முடைய கொள்கைக்கு நாம் சட்ட வடிவம் பெற முடிந்தது.

அதைப்போலத்தான் காங்கிரஸ் கட்சியின் தியாகி சங்கரலிங்க நாடார் இந்த மண்ணுக்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்று உண்ணா நோன்பு இருந்தே செத்தார். விருதுநகர் சங்கரலிங்க நாடார் உள்ளூர்காரர். அவரைப் போய்ப் பார்த்து காமராஜர் ஆறுதல் கூறவில்லை. உங்கள் கோரிக்கையை நிறைவேற்று கிறேன், உண்ணா நோன்பை கைவிடுங்கள் என்று அவருக்கு உறுதி தரவில்லை. அண்ணாதான் தந்தார். அப்படியும் அவர் உண்ணா நோன்பை கைவிடவில்லை. மாண்டுபோனார். அவருடைய பிணத்தை மதுரைக்கு கொண்டுவந்து உடலைக் கூறுபோட்டு பிரேத விசாரணை செய்து கூறுபோட்ட உடலை மயானத்திற்கு எடுத்துச் செல்ல ஊர்வலம் நடத்தக்கூட தடை விதித்து அவ்வளவு அநியாயம் அன்றைக்கு காங்கிரஸ்காரர்கள் செய்தார்கள்.

காமராஜர்தான் அன்றைக்கு முதலமைச்சராக இருந்தார். ஆனால் பெரியார் சென்னை ராஜ்யத்திற்கு தமிழ்நாடு என்று பெயர்வைக்க வேண்டும் என்று வாதாடினார். ஆனால் அவரால் ஆதரிக்கப்பட்ட காமராஜர் காலத்தில் நிறைவேறவில்லை. ஆனால் பேரறிஞர் அண்ணா காலத்திலேதான் இந்த மண்ணுக்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்கப்பட்டது என்றால் அந்தக்

கொள்கைகளை நிறைவேற்ற நம்முடைய கையிலே ஆட்சிப் பொறுப்பு தேவை. ஆட்சிப் பொறுப்பு தேவை என்றால் அதற்கு தேர்தல் தேவை. அதில் நாம் ஈடுபட்ட காரணத்தால்தான் நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வரமுடிந்தது. இந்தியை எதிர்த்து 1938ஆம் ஆண்டு முதல் போரிட்டோம், 1965 ஆம் ஆண்டிலே பலபேரை பலி கொடுத்தோம். அப்படியெல்லாம் நடைபெற்ற அந்த மொழிப்புரட்சியில் இந்தியை விரட்ட முடியவில்லை. ஆனால் பேரறிஞர் அண்ணா தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகுதான் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகுதான் நம்மால் இந்தியை விரட்ட முடிந்தது. இனி தமிழ்நாட்டுப் பள்ளிக் கூடங்களில் இந்திக்கு இடமில்லை. தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழித் திட்டம்தான் என்று சட்டமன்றத்திலே அண்ணா வீரமாக அறிவித்தார் என்றால் நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த காரணத்தால்தான்.

ஆகவே பெரியார் கொள்கை நிறைவேற வேண்டும் என்றாலும்கூட ஆட்சியை அறவே மறந்துவிட்டு அந்தக் கொள்கையை நிறைவேற்ற முடியும் என்பது இயலாத காரியம். ஏனென்றால் புத்தருடைய கொள்கையைக்கூட, ஆட்சிப் பொறுப்பிலே இருந்த அசோகனால் தான் நிறைவேற்ற முடிந்தது. ஆனால் அந்த ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு அந்தக் கொள்கை எங்கே போயிற்று? இலங்கைக்குப் போனது! சைனாவுக்குப் போனது! இங்கே இல்லை.

எனவே சில பெரிய கொள்கைகளை புனிதமான கொள்கைகளை நிறைவேற்ற ஆட்சிப் பொறுப்பு கையிலே இருக்க வேண்டும்.

எனவேதான் 1957 ஆம் ஆண்டு தேர்தலில் கழகம் போட்டியிடலாமா வேண்டாமா என்று மக்கள்

கருத்தறிந்து திருச்சியில் அன்பில் முன்னின்று நடத்திய மாநாட்டில் அறிஞர் அண்ணா முடிவெடுத்து தேர்தலில் ஈடுபட்டோம். படிப்படியாக வெற்றிகளைப் பெற்றோம். வெற்றிகளைப் பெற்ற காரணத்தால் அண்ணா காலத்திலும் சரி, அண்ணாவுக்குப் பிறகும் சரி, பிறகு 89ல் நாம் வெற்றி பெற்ற பிறகும் சரி பெரியாரின் கொள்கைகளை, சுயமரியாதை லட்சியங்களை, திராவிட இயக்கத்தின் கொள்கைகளை இன்றைக்கு நிறைவேற்றி வருகிறோம் என்றால், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 20 சதவிகிதம் என்று நாம் அறிவித்தோம் என்றால் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காரணத்தால்தான்.

அறுபது ஆண்டுகளுக்கு முன்பு செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம். பெண்களுக்கு சொத்தில் சம உரிமை தரவேண்டும் என்ற தீர்மானத்தை நாம் சட்டமாக்கினோம் என்றால் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காரணத்தால்தான்.

எனவே ஆட்சிப் பொறுப்பும் தேவை. ஆனால் ஆட்சிப் பொறுப்பு மாத்திரமே லட்சியம் அல்ல. கொள்கைகளை நிறைவேற்ற ஆட்சிப் பொறுப்பு தேவை. அப்படியானால் கொள்கைதான் முக்கியம். அதை நிறைவேற்றுகின்ற கருவி ஆட்சிப்பொறுப்பு. கொள்கையை மாத்திரம் வைத்துக் கொண்டு கருவியை இழந்து விட்டால் கொள்கையை நிறைவேற்ற முடியாது.

எனவே அந்த கருவியை இழந்துவிடாமல் இருப்பதற்காகத்தான், அந்தக் கருவியை பெறுவதற்காகத் தான் நாம் நம்முடைய இயக்கத்தை அதற்கேற்ற வகையிலே கூட பலப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். மன்னை சொன்னது போல மக்களிடத்திலே அறிவுத்தெளிவை ஏற்படுத்தியாக

வேண்டும். அந்த அறிவுத்தெளிவு வேறு மாநிலத்தில் ஏற்பட்டிருக்கின்ற அளவுக்கு தமிழகத்தில் ஏற்படவில்லை. வேறு மாநிலத்தில் இல்லாத அளவுக்கு பிரச்சாரம் தமிழ்நாட்டில் நடைபெறுகிறது. வேறு மாநிலத்தில் எதிர்க்கட்சியில், தி.மு.கழகம் போன்ற மாநிலக் கட்சியில் இல்லாத அளவுக்கு நம்முடைய இயக்கத்தில் சிறந்த சொற்பொழிவாளர்கள், எழுத்தாளர்கள், ஆற்றலாளர்கள் இருக்கிறார்கள். இருந்தும்கூட இவைகளெல்லாம் நகரப்புறங்களோடு நின்றுவிடுகின்றன. பட்டிதொட்டி களுக்குச் செல்லுகின்ற வாய்ப்பு இன்னும் சரியாக கிட்டவில்லை.

அந்த வாய்ப்பை புதிய மாவட்டச் செயலாளர்கள், மற்றும் பழையவர்களாக இருந்து இப்போது புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டச் செயலாளர்கள் அந்தப் பணியினை நிறைவேற்றுகின்ற பொறுப்பை எற்றுக் கொண்டாக வேண்டும்.

ஒவ்வொரு வட்டாரத்திலும் பிரச்சினைகள் உருவாகிக்கொண்டிருக்கிறது. அந்தப் பிரச்சினைகளை யெல்லாம் நம்முடைய பிரச்சினைகளாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

குடிநீர் பஞ்சம், பெண்கள் கையில் குடமேந்தி ஒரு மைல் இரண்டு மைல் நடந்து போகிறார்கள். அப்படி யென்றால் எனக்கு போன் செய்து, பொதுச் செயலாளருக்கு போன் செய்து தங்கள் ஊரில் பெண்கள் தண்ணீரின்றி அலைந்து கொண்டிருக்கிறார்கள். என்ன செய்யலாம் என்று யோசனை கேட்டுக்கொண்டிருக்கத் தேவையில்லை. நீங்களே ஒரு போராட்டத்தை அறிவித்து நீங்களே நடத்தலாம். அதற்கு தி.மு.கழக தலைமையின் அனுமதி கிடைக்கவில்லை என்று சொன்னால் நீங்கள் போராட்டம் நடத்த தயாராக இல்லை என்று பொருள்.

## "அழிந்து வரும் கலாச்சாரத்தின் அடையாளச் சின்னம்"!

சாலை இல்லை என்றால், சுகாதார வசதி இல்லையென்றால், தொற்று நோய் பரவுகிறது என்றால், பள்ளிக்கூடம் சீராக இல்லை என்றால், சாலைகள் பழுதடைந்து கிடக்கிறது என்றால், மருத்துவமனை இல்லையென்றால் அந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நீங்களே அறவழிப் போராட்டங்களை நடத்த வேண்டும்.

இவைகளெல்லாம் நம்முடைய பேராசிரியர் அளித்த கொள்கை விளக்கங்களுக்கு செயல் வடிவங்கள். கொள்கைகளை நிறைவேற்ற ஆட்சிப் பொறுப்புத் தேவை. அந்த ஆட்சிப் பொறுப்புக்கு தேர்தல் தேவை. அந்தத் தேர்தலில் வெற்றி பெற உழைப்பு தேவை. தேர்தல் நேரத்தில் வந்து என்னை வேட்பாளராக ஆக்குங்கள் நான் ஜெயித்துக் காட்டுகிறேன் என்று சொன்னால் போதாது. அவர்களுடைய வேட்பாளர்கள் வேறு. நம்முடைய வேட்பாளர்கள் வேறு. அவர்களுடைய வேட்பாளர்கள் கொலைகாரர்களாக, குடிகாரர்களாக, கடத்தல்காரர் களாக இருக்கலாம். அவர்களுடைய வேட்பாளர்கள் அந்த ஊர்க்காரராக இல்லாதவராக இருக்கலாம். அது வேறு! அவர்கள் கதையே வேறு!

ஏனென்றால் அழிந்து வருகின்ற ஒரு "கலாச்சரத்தின் அடையாளச் சின்னமாக ஒருவர் இன்றைக்கு நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறார் என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. (பலத்த கைதட்டல்)

எனவே அழிந்து வரும் நமது கலாச்சாரத்தை பிழைக்க வைத்து வாழ வைக்க வேண்டிய அந்தப் பெரும் பொறுப்பு

நம்முடைய கையிலே இருக்கிறது என்பதை ஒருபோதும் மறந்து விடக்கூடாது.

எனவேதான் ஒவ்வொருவரும் உழைக்கின்ற தேனீக்களாக மாற வேண்டும். மற்றவர்கள் உழைப்பார்கள் என்று எண்ணக்கூடாது. நாம் ஏன் உழைக்கவேண்டும்? நாமா வேட்பாளர்களாக நிற்கப் போகிறோம் என்று கணக்குப்போடக்கூடாது. ஒருவேளை நீங்களே கூட வேட்பாளராக ஆகலாம். ஆகாவிட்டால் நாம்தான் வேட்பாளர் என்று எண்ணி பணியாற்றுகின்ற அந்த பொதுநல உணர்வு வந்தால்தான் கொள்கையில் வெற்றி பெற முடியுமேயல்லாமல், வேறுவழியே கிடையாது.

எனவே பொதுக்குழு கூட்டத்திற்கு வந்துள்ள பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரையும் வரவேற்று நன்றி கூறுகிறேன். பாராட்டுகின்றேன். நாம் கோவை மாநில மாநாட்டில் சந்திக்க இருக்கின்றோம். அப்போது நம்முடைய பொதுக்குழுகூட இருக்கின்றது. அதற்கு இடைக்காலத்தில் செயற்குழு நடைபெற இருக்கின்றது. நாம் காலையிலே அறிவித்த பல்வேறு போராட்டங்களை நடத்துவதற்கான உத்திகளையெல்லாம் கலந்து ஆலோசிக்க இருக்கின்றோம். அவைகளுக்கெல்லாம் உங்களுடைய அரிய ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும் என்று உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன். காலையிலிருந்து மாலைவரை என் கண்குளிர, என் மனம் குளிர காட்சிதந்த உங்களுக் கெல்லாம் மீண்டும் மீண்டும் என் நன்றியினையும், பாராட்டினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

---



தூய தமிழ்க் காவலர்
கு.மு. அண்ணல்தங்கோ
நினைவு நூலகம்

# தலைமைக்கழக வெளியீடுகள்

| | ரூ. | பை. |
|---|---|---|
| திருச்சி மாநில மாநாட்டு பேருரை | 3 | 00 |
| மறுமலர்ச்சி | 3 | 00 |
| முப்பெரும் விழா - 85 | 3 | 00 |
| நடந்து வந்த பாதை - 1987 | 3 | 00 |
| ஒதுக்கிய நிதியினை ஒதுக்கியவர் எவரோ? | 3 | 00 |
| திருச்சி திருப்புமுனை | 2 | 50 |
| ஆகஸ்ட் 7 நவம்பர் 7 | 2 | 50 |
| மாநிலசுயாட்சி தீர்மானம் 1974 | 2 | 00 |
| எதிர்கட்சிகளுக்கு ஏன் இந்த அநீதி | 2 | 00 |
| அக்கினிக்குஞ்சு | 2 | 00 |
| நாட்டு விடுதலையும் நமது சமுதாய விடுதல்லையும் | 2 | 00 |
| கலைஞர் மேலவை பேருரை | 1 | 50 |
| கடவுள் மீது ப்ழி | 1 | 50 |
| இந்திய ஜனநாயகம் எங்கே போகிறது | 1 | 50 |
| கலைஞர் மே தின முழக்கம் | 1 | 00 |
| சிறாப்புராணம் | 1 | 00 |
| மதுப்பழக்கம் ஒரு சமூகப்பிரச்சினை | 1 | 00 |
| இது ஒரு தொடக்கம் | 1 | 00 |
| மாநில உரிமைகளை தி.மு.க. காத்திடும் | 0 | 50 |
| மீண்டும் ஒரு காலனி ஆதிக்கமா? | 3 | 00 |
| ஆபாசம் எது? அறிந்துகொள்வீரே! | 1 | 00 |
| DMK on State Autonomy | 2 | 00 |
| Social Liberation a Call to the People | 2 | 00 |
| Answers to Adversaries | 2 | 00 |
| The Need of the Hour | 1 | 00 |

கிடைக்குமிடம் :

அண்ணா அறிவாலயம்

சென்னை-18.